பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை ? காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. [illegible]

மலர்: 19] சென்னை: ஐப்பசி 20 (6—11—71) சனி — வெளியீடு: ஐப்பசி 21 (7—11—71) ஞாயிறு [இதழ்: 120

ஆயத்தமாகிறது தமிழ்நாடு

சென்னை, நவ. 6 —

நெருக்கடிநிலை பிரகடனப் படுத்தப்படுமானால், அதனை ஒட்டி உள்நாட்டுப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கான ஒத்திகைகளை மேற்கொள்ளுவதற்கான ஆயத்த நிலையில் தமிழக அரசு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

முக்கியமான தொழிற்கூடங்களுக்குக் கூடுதலான பாது

(4-ம் பக்கம் பார்க்க)

நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி

நிலைமையைச் சமாளிக்கச் சிக்கன நடவடிக்கை-- தமிழ்நாடு அரசின் உடனடி ஏற்பாடு

ஆடம்பர விழாக்கள் தவிர்க்கப்படும்

அடிக்கல் நாட்டு விழாக்களுக்கு அரசு அனுமதி தேவை

ஆறு மாத காலத்துக்குப் புதிய நியமனங்கள் இல்லை

பயணப்படி -- தொலைபேசிக் கட்டணம் -- பெட்ரோல் செலவுகள் குறைப்பு

அரசுத் துறைச் செலவுகளில் 5 சதவிகிதம் வெட்டு

வேலூர், நவ. 6—

சுமார் 1 கோடி வங்க தேச அகதிகள் இந்தியாவுக்கு வந்திருப்பதனால் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கக் கடுமையான சிக்கனத்தைக் கடைபிடிப்பது என்று தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

அரசு அதிகாரிகளின் ஒத்துழைப்புடன், திட்டமில்லா செலவினங்களில், எல்லா அரசுத் துறைகளிலும் குறைந்தது 10 சதவிகிதத்துக்காவது செலவுகளைக் குறைக்க முடியுமென்று அரசு கருதுகிறது.

இது தொடர்பாக அரசு வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:—

1. வளர்ச்சித் திட்டமில்லாத் துறைகள் மற்றும் திட்டமில்லா வளர்ச்சித் துறைகளின் செலவுகளுக்காக 1971—1972-ம் ஆண்டு வரவு -- செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட செலவினங்களில் 5 சதவிகிதத்தைக் குறைப்பது.

2. இப்போது காலியாக இருக்கும் எல்லா வேலைகளுக்கும் இன்னும் 6-மாதங்களுக்கு ஆட்களை நியமிக்காதிருப்பது; அப்படி அவசியப்பட்டால், அதற்கு அரசின் தனி அனுமதியைப் பெற வேண்டும்.

3. பயணப் படி, தொலைபேசிக் கட்டணம், கார்களுக்கான பெட்ரோல் -- எண்ணெய்ச் செலவுகள், மற்றும் பராமரிப்புக்காக ஒதுக்கப்படும் தொகையில் 10 சதவிகித வெட்டை ஏற்படுத்துவது.

4. விருந்து விழாக்களைத் தவிர்ப்பது -- அல்லது மிக அவசியத்தைக் கருதிக் குறைப்பது.

5. இலாக்காக்களுக்கிடையே மற்றும் சாதாரணமாக நடைபெறும் கூட்டங்களில் நடைபெறும் தேநீர் விருந்துகளை இயலும் அளவுக்குக் கட்டுப்படுத்துவது.

6. அடிக்கல் நாட்டுவது -- பொதுக் கட்டடத் திறப்பு விழாக்கள் ஆகியவற்றுக்கு அரசு அனுமதியின்றி செலவு செய்யக்கூடாது.

உடனடியாக நடைமுறைக்கு வரும் இந்தச் சிக்கன நடவடிக்கைகளை எல்லாத் துறைகளின் தலைவர்களும் கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

முதல்வர் கலைஞர் அமெரிக்கப் பயணம்-- திங்கள் மாலை புறப்பாடு

உலகப் பாங்கித் தலைவர் --- ஊதாண்ட் -- எட்வர்டு கென்னடி ஆகியோருடன் சந்திப்பு

கான்சாஸ் பல்கலைக் கழகத்தின் சிறப்பு விருந்தினராக இருக்க அழைப்பு

சென்னை, நவ. 6–

தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் – அமெரிக்க அரசின் அழைப்பை ஏற்று – அமெரிக்காவில் மூன்று வார காலம் சுற்றுப்பயணம் செய்வதற்காக, நவ. 8-ம் நாள் மாலை 6 35 மணியளவில் சென்னையிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டுப் பம்பாய் வழியாகச் செல்கிறார்; இலண்டனில் ஒரு நாள் தங்கிவிட்டு நவ. 10-ந்தேதி காலை அங்கிருந்து புறப்பட்டு அன்றே வாஷிங்டன் நகருக்குப் போய்ச் சேருகிறார்.

அமெரிக்கச் சுற்றுப்பயணம் தொடர்பாகச் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் -- முதலமைச்சர் கலைஞர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"அமெரிக்காவில் தாங்கள் எந்தெந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள்?"

முதல்வர்:—"10-ம் நாள் காலையில் இலண்டனிலிருந்து புறப்பட்டு அன்று மாலையும் நவ. 11-ந் தேதியும் வாஷிங்டனில் தங்குகிறேன்; அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதுவரின் விருந்தினராக இரண்டு நாட்கள் தங்குகிறேன்; 11-ந்தேதி மாலை உலக நாடுகளுக்கான அமெரிக்க நிதி உதவி நிறுவனத்தின் நிர்வாகி டாக்டர் ஹன்னா அவர்களின் விருந்தினராக இருக்கிறேன்; மறுநாள் அமெரிக்க நாட்டு விவசாயத் துறை அமைச்சர் இல்லத்தில் மதிய உணவு; அப்படியே வாஷிங்டனில் கண் பரிசோதனையும் செய்துகொண்டு வரலாம் என்றிருக்கிறேன்."

கேள்வி:—"எத்தனை நாட்கள் பரிசோதனை நடக்கும்?"

முதல்வர்:—"ஒன்று அல்லது இரண்டு நாட்கள் இருக்கலாம்; பரிசோதனைதான்."

கேள்வி:—'அமெரிக்காவில் நீங்கள் யார் யாரைச் சந்திக்கிறீர்கள்?'

முதல்வர்:—"ஊதாண்ட், எட்வர்ட் கென்னடி, நியூயார்க் கவர்னர் நெல்சன், ராக்பெல்லர் மற்றும் செனட் உறுப்பினர் ஆகியோருடன் சந்திப்புகள் இருக்கும்; அமெரிக்க அரசுத்துறை அதிகாரிகளையும் சந்திக்கிறேன்; நியூயார்க், வாஷிங்டன், சிகாகோ, சான்பிரான்சிஸ்கோ ஆகிய இடங்களில் பயணம் செய்கிறேன்; கான்சாஸ் பல்கலைக் கழகத் தலைவர் என்னைப் பல்கலைக் கழக விருந்தினராக இருக்கும்படி அழைப்பு அனுப்பியிருக்கிறார்; அதையும் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். அப்படியே உலக பாங்கித் தலைவர் மக்னமாராவையும் சந்திப்பேன்.

"நியூயார்க்கிலுள்ள தமிழ்ச் சங்கம் எனக்கு வரவேற்புத் தருவதாகக் கடிதம் எழுதியிருக்கிறது -- அதையும் ஏற்றுக் கொண்டுள்ளேன்."

கேள்வி:— "உலகப் பாங்கித் தலைவரிடம் எதுபற்றிப் பேச இருக்கிறீர்கள்?"

முதல்வர்:—"நிதித்துறைச் செயலாளரும் உடன் வரும்போதே, எதைப்பற்றிப் பேசுவேன் என்று தெரியவில்லையா?"

கேள்வி;—"குறிப்பிட்ட திட்டங்கள் ஏதாவது இருக்கிறதா?"

முதல்வர்:—"ஏராளமாக இருக்கிறது."

கேள்வி:—"தாங்கள் எப்போது திரும்ப இருக்கிறீர்கள்?'

முதல்வர்:— "எப்போது வருவேன் என்பதை அமெரிக்காவிலிருந்து தெரிவிப்பேன்."

கேள்வி:—"போகும் வழியில் இலண்டனில் தங்குவீர்களா?"

முதல்வர்:— "இலண்டனில் ஒரு நாள்--நவ. 9-ந்தேதி தங்கிவிட்டு நவ 10-ந்தேதி காலையில்தான் புறப்படுகிறேன்."

கேள்வி:— "இலாகாக்கள் அதுவரையில் மாற்றப்படுமா?"

முதல்வர்:—"மாற்றம் அல்ல-- பகிர்ந்தளிக்கப்படும்."

கலைஞரைச் சந்தித்தார் ஈ. வெ. கி. சம்பத்

சென்னை, நவ. 6—

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், நேற்று மாலை முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இல்லத்திற்கு வந்து -- கலைஞரிடம் உரையாடிச் சென்றார்.

அமைச்சரவை நாளை கூடுகிறது

நிதி நெருக்கடியைச் சமாளிப்பது பற்றி ஆலோசிக்கும்

சென்னை, நவ. 6—

"வங்காள தேச அகதிகள் பிரச்சினை காரணமாக ஏற்படும் நிதி நெருக்கடியைச் சமாளிக்கப் புது வரிகள் விதிப்பது குறித்து ஆலோசிப்பதற்காகத் தமிழக அமைச்சரவைக் கூட்டம்; நவம்பர் 7-ஆம் நாளன்று நடைபெறும்"

என்று முதல்வர் கருணாநிதி அவர்கள், செய்தியாளரிடம் தெரிவித்தார்.

"இது சம்பந்தமாக மத்திய அரசிடமிருந்து யோசனை வந்துள்ளது; 7-ஆம் தேதி அமைச்சரவை கூடி இதுகுறித்து முடிவு செய்யும்" என்றார் அவர்.

சட்டமன்றக் கூட்டம்

இத்திங்கள் 15-ஆம் நாள் நடைபெறுவதாக இருந்த தமிழகச் சட்டமன்றக் கூட்டம் தள்ளிப் போடப்படுகிறது; அநேகமாக இத்திங்கள் இறுதியிலோ அல்லது டிசம்பர் திங்கள் துவக்கத்திலோ கூட்டம் நடைபெறலாம்.

"இரம்சான் பண்டிகை காரணமாகச் சட்டமன்றக் கூட்ட நாளை மாற்றும்படி முஸ்லிம் லீக் சட்டமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர்; இதன் காரணமாகக் கூட்ட நாளை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது"

என்று செய்தியாளரிடம், முதல்வர் கூறினார்.

துணை மானியக் கோரிக்கை

"துணை மானியக் கோரிக்கை -- மின்வாரிய நிதி அறிக்கை ஆகியவற்றை இணைத்து விவாதிக்கலாம் என்று யோசனை இருக்கிறது" என்றார்.

பாகிஸ்தானில் அவசர நிலை பிரகடனம்

"பாகிஸ்தானில் கூடிய விரைவில் சர்வாதிகாரி யாகியா கான், அவசர நிலைப் பிரகடனம் செய்யக்கூடும்"

என்று பாகிஸ்தான் பத்திரிகைகள் எதிர்பார்க்கின்றனவாம்.

இந்தியாவின் நிலை

புதுடில்லி, நவ. 6—

இரண்டு நாளைக்கு ஒருதடவை நடைபெறும் மத்திய அமைச்சக அரசியல் விவகாரக் குழுவின் கூட்டம் இன்று நடைபெற்றபோது, 'நாட்டில் அவசர நிலை பிரகடனம் செய்யவேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டுவிடவில்லை' என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அதுபோல், [illegible] தனது சுற்றுப்[illegible] அவசரமாக முடித்துக்கொண்டு திரும்பவேண்டிய அவசியமில்லை என்றும் அது கருதியது.

விசைத்தறி ஒதுக்கீட்டிலும் டில்லியின் தலையீடு

தொழில்வளர்ச்சியைத் தடைப்படுத்தும் போக்கு

சேலம் நெசவாளர் கூட்டுறவு நூற்பாலை விழாவில் கலைஞர் வேதனைக் குரல்

சேலம், நவ. 5—

"மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தரவேண்டும் என்ற கோரிக்கை வலுத்துவரும்போது, மேலும் மேலும் தொழில் வளர்ச்சிக்குத் தடையாக இருந்துவருவது வேதனைக்குரியதாகும்.

"சாதாரணமான விசைத்தறிகளுக்கு அனுமதி தருவதில் கூட, மத்திய அதிகாரிகள் விரைவாகச் செயல்படுவதில்லை.

"1970-லிருந்து 5 ஆண்டுக் காலத்துக்கு 12 000 விசைத்தறிகள் ஒதுக்குவதாக மத்திய அரசு ஏற்கனவே முடிவு செய்திருந்தும் கடந்த இரண்டாண்டுகளாக--இதுவரையில்--சுமார் 800 விசைத்தறிகளே ஒதுக்கப்பட்டிருக்கிறது"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இங்கு நடைபெற்ற விழா ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

அம்மாப்பேட்டை சேலம் கூட்டுறவு நூற்பாலையில், விசைத்தறி பாவு ஆலை அடிக்கல்நாட்டு விழாவை முதல்வர் நடத்திவைத்தார்.

நூற்பாலைச் சங்கத் தலைவர் செயராமன் எம்.எல்.ஏ. அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

கலைஞர் வருகையையொட்டி சேலம் நகர்த் தெருக்களெல்லாம் வண்ணத் தோரணங்களாலும் -- வரவேற்பு வளைவுகளாலும் அழகுறத் திகழ்ந்தன; சாலையின் இருமருங்கிலும் மக்கள் கூடிநின்று கலைஞரை உச்சாகமாகக் சரவொலி எழுப்பி வரவேற்றனர்; தாய்மார்கள் கைக்குழந்தைகளுடனும் சிறுர்களுடனும் வந்து நின்று வாழ்த்துத் தெரிவித்தனர்.

விழா நடக்கும் மேடைக்குக் கலைஞரை அழைத்து வரும் வழியில் பூவிதழ்களைத் தூவி மலர்களால் அமைக்கப்பட்ட மலர்ப் பாதையில் அழைத்து வந்தனர்.

விழாச் சிறப்புற நிகழும் வண்ணம் வாழ்த்திக் குடியரசுத் துணைத் தலைவர், தமிழக ஆளுநர் கே. கே. ஷா, அமைச்சர்கள் செ. மாதவன், பேராசிரியர் க. அன்பழகன், தொழிலதிபர்கள் -- தொழிலாளர்கள் ஆகியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

விழாவுக்கு அமைச்சர் இராசாராம் அவர்கள் தலைமைவகித்தார்.

திரு. கே. எஸ். இராமகிருஷ்ணன் அறிக்கை படித்தார்.

முதல்வருக்குத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் சார்பிலும், ஐ.என்.டி.யு.சி. சங்கச் சார்பிலும், கம்யூனிஸ்டுத் தொழிற் சங்கச் சார்பிலும் வரவேற்பிதழ்கள் படித்தளித்து மாலைகள் அணிவிக்கப்பட்டன.

கூட்டுறவு நூற்பாலைச் சார்பில் ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ. அவர்கள், முதல்வருக்கும்-- அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், அமைச்சர் க. இராசாராம் ஆகியோருக்கு வரவேற்பிதழ்கள் படித்தளித்தார்.

அமைச்சர் க. இராசாராம் அவர்கள், அறிஞர் அண்ணா படத்தைத் திறந்துவைத்தார்.

அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள், கலைஞர் படத்தைத் திறந்துவைத்தார்.

இறுதியில் கலைஞர் அவர்கள் உரையாற்றுகையில கூறியதாவது:—

"விசைத் தறிகள் அமைப்பது பற்றி அசோக் மேத்தா, செய்திருக்கின்ற பரிந்தரையில் மொத்தம் இந்தியாவில் ஓர் இலட்சம் விசைத் தறிகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று தெரிவித்திருக்கிருர்கள்; இதில், '12,000 விசைத் தறிகள் தமிழ்நாட்டில் அறிமுகப் படுத்த வேண்டும்' என்று சொன்ன பிறகும், அந்தப் புள்ளி விவரத்தின்படி -- குறிப்பிட்ட அளவை நாம் பெற முடியவில்லை.

'விசைத்தறி வந்தால் கைத்தறி பாதிக்கப்படும்' என்று சிலர் சொல்கிருர்கள்; 'கட்டை வண்டிக் காலத்தில்தான் இருக்க வேண்டும்' என்று கைத்தறியாளர்கள் கருதினல், உற்பத்தி பெருகாது.

சூரத்தில் கைத்தறிகள் மாற்றப்பட்டு விசைத்தறிகள் கொண்டு வரப்பட்ட பிறகு, 60,000 விசைத் தறிகள் அங்கு இருக்கின்றன; ஏற்கனவே நூறு ரூபாய் -- இருநூறு ரூபாய் என்று சம்பாதித்தவர்கள், இப்போது அறுநூறு ரூபாய்வரை சம்பாதிக்கிருர்கள்.

தமிழ்நாட்டில் அனுமதி பெறப்பட்ட விசைத் தறிகளின் எண்ணிக்கை 21,000; இதில் 10,000 விசைத் தறிகள் அனுமதி பெருதவை; இவற்றில் 6,000 விசைத் தறிகள் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவை; எல்லாவற்றிலும் இப்படி அனுமதி பெருமல் நடத்த வேண்டுமென்று நான் சொல்லமாட்டேன்.

1970—71-ல் ஒதுக்கிய விசைத் தறிகளின் எண்ணிக்கை 968; அனுமதி பெற்றவர்கள் 822 பேர்; இவர்கள்தான் லைசென்சுக் கட்டண[illegible] செலுத்தினர்கள்.

லைசென்சுக் கட்டணம் தந்தவர்கள் 1 524 பேர்.

விசைத்தறிகள் அமைப்பது பற்றி மத்திய அரசு ஒதுக்கிய பிறகு அதற்கான உரிமையை மாருக்குத் தந்தால் என்ன? அதையும் டில்லிதான் கவனிக்க வேண்டுமென்று சொல்கிருர்கள் என்ருல், இதை நான் உரிமைக்காக அல்ல -- நிலைமையையும் பார்க்க வேண்டுமென்று சொல்கிறேன்.

விசைத்தறிகளுக்கான பேர்மிட் தருகின்ற உரிமையும் அவர்களிடமே இருக்கவேண்டுமோ என்று கேட்டால், உடனே மாநில சுயாட்சி கேட்பதாகக் கருதக்கூடாது; இன்றுள்ள சூழ்நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும்; இப்படிப்பட்ட உரிமைகளை மத்திய அரசு தளர்த்த வேண்டும்.

மத்திய அரசு அதிகாரிகள்தான் இந்த உரிமைகளைத் தர வேண்டுமென்ருல், தமிழக அரசு மீது நம்பிக்கையற்றுப் போய்விட்டதா?

ஆகவே, விசைத்தறிகளுக்குத் தாராளமாக உரிமை தந்தால் தான் உற்பத்தி பெருக வாய்ப்பு ஏற்படும் என்பதை அவர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்."

கொட்டுமேளம்—கொம்புச் சத்தம் ஒலிக்க வாணம் முழங்க அமைச்சர்கள் வரவேற்கப்பட்டனர்.

கலைஞர் வருவதையொட்டித் தெருவெங்கும் மாக்கோலம் போடப்பட்டிருந்தது.

கலைஞரின் பேச்சைக் கேட்க விழாப் பந்தலில் பல்லாயிரக்கணக்கானவர் கூடியிருந்தனர்.

விழா மேடை வண்ண வண்ணக் கைத்தறியாடைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

விழாவுக்கு திரு. மாரியப்பன் தலைமை வகித்தார்.

கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கச் சார்பில் கலைஞருக்கும், அமைச்சர்களுக்கும் வரவேற்பு இதழ்கள் படித்தளிக்கப்பட்டன.

திரு. பழனியப்பன், ஆறுமுகம் எம்.எல்.ஏ., செயராமன் எம்.எல்.ஏ., ஈ. ஆர். கிருட்டினன் எம்.பி., அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் பேசினர்.

இங்கு கலைஞர் படத்தை அமைச்சர் க. இராசாராம் அவர்களும், அண்ணா படத்தைக் கலைஞரும் திறந்துவைத்து உரையாற்றினர்.

கலைஞர் சேலத்திற்கு வருகை தந்தவுடன், மறைந்த சேலம் தமிழ்ச் சங்கத் தலைவர் கணபதி அவர்களின் இல்லம் சென்று -- அவரது துணைவியாரைக் கண்டு நலம் விசாரித்தார்.

கூட்டுறவு நெசவாளர் உற்பத்தி -- விற்பனைச் சங்க வரவேற்பு

பின்னர், அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கத்தின் சார்பில் முதல்வருக்கும் -- அமைச்சர்களுக்கும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

வண்ணக் கலைஞர்கள் முன்னேற்றச் சங்கம்

வண்ணக் கலைஞர்கள் முன்னேற்றச் சங்க அமைப்புக் கூட்டம், 14—11—71 காலை 9-மணியளவில் சென்னை -- இராயப்பேட்டை நெடுஞ்சாலை, 56-எண்ணுள்ள வேலு ஓவியப் பணிமனையில (திருவள்ளுவர் சிலை அருகில்) நடைபெறும்; அதுபோது, வர்ண வேலையில் ஈடுபாடுள்ள கலைஞர்கள் அனைவரும வந்து கலந்துகொள்ளுமாறு அமைப்பாளர் எஸ் வி. வேலு எம்.சி. கேட்டுக்கொள்கிருர்.

மேலப்பாளையம் பகுத்தறிவாளர் கழகம்

மேலப்பாளையம் பகுத்தறிவாளர் கழக அமைப்புக் கூட்டம், 27—10—71-ல் திரு. எஸ். பெரியசாமி தலைமையில்—மாவட்டச் செயலாளர் டே. சுந்தையா முன்னிலையில் நடைபெற்றது; அதுபோது, கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: பி. கோமதிநாயகம்; செயலாளர்: ம. பூ. கருணாநிதி; பொருளாளர்: து. பெ. இராமையா; மாவட்டப் பிரதிநிதி: ஏ. டி. அரசு; செயற்குழு உறுப்பினர்கள்: கே. பி. கனகராசு, எஸ் பெரியசாமி, எம். ஏ. நடராசன், வே. சுப்பையா, பா. பாலையா, எம். சிகாமணி, ஏ. சண்முகராசன்.

வேலை தேடுவோர் எண்ணிக்கை ஓராண்டில் அதிகரிப்பு

புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதில் போதிய முன்னேற்றமில்லை

மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தரும் புள்ளி விவரம்

புதுடில்லி, நவ. 6—

"வேலைவாய்ப்புகளைத் தேடுபவர்களின் எண்ணிக்கை சென்ற ஓராண்டில் கிட்டத்தட்ட 23 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது; அதே சமயத்தில் வேலைவாய்ப்புகளின் வளர்ச்சி விகிதம் அரசாங்கத் துறையில் 2.20 சதவிகிதமாகவும், தனியார் துறையில் ஒரு சதவிகிதத்திற்குக் குறைவாகவும் மட்டுமே இருந்திருக்கிறது"

என்று மத்திய தொழிலாளர் நல அமைச்சர் ஆர். கே. கடில்கார் கூறினர்.

வேலைவாய்ப்புப் பற்றிய மத்தியக் குழுவின 8-வது கூட்டத்தில் அமைச்சர் பேசினர்; அப்போது அவர் மேலும கூறியதாவது:—

"1970-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் வேலை தேடுபவர்களின் எண்ணிக்கை 39 இலட்சமாக இருந்தது; ஆனல் இந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இந்த எண்ணிக்கை 48 இலட்சமாக அதிகரித்துவிட்டது. படித்தவர்களிடையே வேலை தேடுவோரின் எண்ணிக்கையும் ஏறக்குறைய இதே விகிதத்தில் அதிகரித்து வந்துள்ளது.

சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில் வேலைவாய்ப்புப் பற்றிய மத்திய குழு கடந்த முறை கூடியது; அக்கூட்டத்திற்குப் பிறகு நாட்டில் வேலைவாய்ப்பு நிலவரத்தில் முன்னேற்றம் எதுவும் இல்லை.

நகர்ப்புறப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளைத் தேடுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது; ஆனல், புதிய வேலைவாய்ப்புகள் போதுமான அளவில் இல்லை.

பல தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டதும இந்த நிலைமைக்கு ஒரு காரணமாகும்.

மூடப்பட்ட பல நிறுவனங்கள் கட்டுப்படியாகக்கூடிய விகதத்தில் இயங்குபவையாக இல்லை; எனவே, அவற்றை மீண்டும் திறப்பது சாத்தியமில்லை.

அதிகமான அளவில் கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றினல் அன்றி வேலையிலாப் பிரச்சினையை விரைவில் தீர்க்க இயலாது.

முதலீட்டுத் தேவைகள் குறைவாகவும -- வேலை செய்வோர் தொகை அதிகமாகவும் உள்ள தான தொழில்களைத் துவக்க வேண்டும்.

கிராமப்புறப் பகுதிகளில் அதிக வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் ஏற்கனவே சில திட்டங்களைத் தொடங்கியிருக்கிறது.

கிராமப்புற வேலைவாய்ப்புகளுக்காக ரூ. 50 கோடி தீவிரத் திட்டமும், படித்த வேலையில்லாதவர்களுக்கான திட்டங்களை வகுக்க ரூ 25 கோடி திட்டமும் உருவாக்கப்பட்டுள்ளன.

பல்வேறு அமைச்சகங்கள் வகுத்துள்ள வேலைவாய்ப்புத் திட்டங்களைப் பரிசீலனை செய்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க மத்திய இணைப்புக் குழு ஒன்றைத் திட்டக் குழு ஏற்கனவே அமைத்திருக்கிறது."

இந்தியாவில் வாக்குரிமை பெற்றேர் 50 கோடி பேர்

பொதுத் தேர்தலுக்கு 3.50 இலட்சம் வாக்குச் சாவடிகள் தேவை

தேர்தல் அதிகாரிகள் மாநாட்டில் தலைமைத் தேர்தல் ஆணையர் சென் வர்மா தகவல்

புதுடில்லி, நவ. 4—

"1971-ஆம் ஆண்டின் தற்காலிக மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் புள்ளிவிவரப்படி, இந்தியாவின் மொத்த மக்கள் தொகை 55 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"இதில் வாக்காளர்களின் தொகை 50 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது; இது, உலகத்தில் கம்யூனிஸ்டுச் சீனவைத் தவிர வேறு எந்த நாட்டின் மக்கள் தொகையையும்விட அதிகமாகும்.

"நாடு முழுவதிலும் நடைபெறவிருக்கும் தேர்தலில் வாக்காளர்கள் சிரமமின்றித் தங்களுடைய வாக்குகளைப் போடுப்பொருட்டு, மூன்றரை இலட்சம் வாக்குச் சாவடிகளை அமைக்கப்பட வேண்டியிருக்கும்; இவற்றை நிர்வகிக்க 16 இலட்சம் தேர்தல் அதிகாரிகள் தேவைப்படுவார்கள்"

என்று தலைமைத் தேர்தல் கமிஷனர் எஸ். பி. சென் வர்மா, அனைத்திந்தியத் தேர்தல் அதிகாரிகளின் முதலாவது மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

1972 பிப்ரவரித் திங்களில் 15 மாநிலங்களிலும் -- மத்திய ஆட்சி நிர்வாகத்திலுள்ள பகுதிகளிலும் உள்ள சட்டமன்றங்களுக்குத் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன; இதையொட்டி நடைபெற்ற இம்மாநாட்டில் 400-க்கு மேற்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

புதிய முறையில் வாக்குச் சீட்டுக்கள்

தலைமைத் தேர்தல் அதிகாரி சென் வர்மா பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தேர்தலில் போலி வாக்காளர்கள் வாக்குப் போடுவதைத் தவிர்க்கும்பொருட்டு எதிர்கால மக்களவை -- சட்டமன்றத் தேர்தல்களில் அடிக்கட்டைகளுடன் கூடிய வாக்குச் சீட்டுப் பயன்படுத்தப்படும்.

புதிய ஏற்பாட்டின்படி, ஒரு வாக்காளருக்கு வாக்குச் சீட்டு வழங்கப்படுவதற்கு முன்பு அந்த வாக்குச் சீட்டின் அடிக்கட்டில் அவர் தம்முடைய கையெழுத்தைப் போட வேண்டியிருக்கும்; அல்லது பெருவிரல் ரேகையைப் பதிக்க வேண்டியிருக்கும்.

புதிய முறை நடைமுறைக்கு வந்தால் போலி வாக்குப் போடுபவர்கள் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடு முன்பு யோசித்துப் பார்ப்பார்கள்."

தேர்தல் அதிகாரிகளின் கடமைகள் என்ன?

வாக்குகளை எண்ணுவது -- மறு எண்ணிக்கை -- முடிவுகளை அறிவிப்பது சம்பந்தமாக சென் வர்மா கூறியதாவது:—

"வாக்கு எண்ணிக்கை அல்லது மறு எண்ணிக்கை முடிந்த பிறகு -- நீதியின் நலனைக் கருதி -- முடிவை அறிவிப்பதற்கு முன்பு சிறிது நேரம் தேர்தல் அதிகாரி காத்திருப்பது அவருடைய கடமையாகும்.

மறு எண்ணிக்கை கோர விரும்பும் வேட்பாளருக்கு வாய்ப்பு இருக்க வேண்டும்; இத்தகைய பிரச்சினைகளில் தேர்தல் அதிகாரி தம்முடைய முன் யோசனையைப் பயன்படுத்த வேண்டும்; அவசரப்பட்டு காரியம் செய்துவிடலாகாது.

தேர்தலுக்குப் பிறகு, பயன்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் -- பயன்படுத்தப்படாத வாக்குச் சீட்டுக்கள் பாதுகாப்புள்ள இடத்தில் இருக்கின்றனவா என்பதற்கும் மற்ற ஏற்பாடுகளுக்கும் தமக்குக்கீழ் உள்ள அதிகாரிகளை மட்டும் நம்பியிராமல், 'ஏற்பாடுகள் சரிவரச் செய்யப்பட்டிருக்கிறதா என்பதைத் தாமே தெரிந்துகொள்ள வேண்டும்.

நாட்டின் இப்போதைய அரசியல் நிலைமையில -- அதாவது வாக்காளர் தங்களுடைய உரிமைகளை முழுமையாக உணரத் தொடங்கியுள்ள நிலைமையிலும், வாக்குச் சீட்டுக்கள் பற்றியும், மற்ற தேர்தல் சான்றேடுகள் பற்றியும் வேட்பாளர்களும், அரசியல் கட்சிகளும், எல்லாவிதமான புகார்களையும் கூறத் தொடங்கியுள்ள நிலைமையிலும் இது மிகவும் முக்கியமானதாகும்."

துணிவுமிக்க உறுதி அவசியம்

திரு. சென் வர்மா மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தேர்தலின்போது, அல்லது தேர்தல் நடைபெறவிருக்கும் நேரத்தில் தேர்தல் அதிகாரிகள்மீது அரசியல்வாதிகளின் அனுவசியமான நிர்ப்பந்தம் அல்லது செல்வாக்கு காரணமாக நிர்வாக அமைப்பு துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக வரும் புகார்கள் உண்மையிலேயே கவலைப்படவேண்டிய ஒன்ருகும்.

தேர்தல் நியாயமாகவும் சுதந்தரமாகவும் நடப்பதை உறுதி செய்வதில் தேர்தல் அதிகாரிக்குப் பெரும் பங்கு உண்டு; சட்டத்துக்கு முரணான அல்லது தவருன காரியத்தைச் செய்யுமபடி அரசியல் எசமானர் யாராவது கூறினல், 'முடியாது' என்று கூற அதிகாரிகளுக்குத் துணிவு இருக்க வேண்டும்.

நிரந்தர அதிகாரிகளையே தேர்தல் அதிகாரிகளாக நியமிக்கத் தேர்தல் கமிஷன் தனிக் கவனம் எடுத்துக்கொள்கிறது; எனவே, அரசியல் வாதிகளின் விருப்பப்படி அவர்களைப் பதவியிலிருந்து விலக்கவோ அல்லது நீக்கவோ முடியாது; நியாயமான பிரச்சினைகளில் சர்வீசு கமிஷனும் அவர்களை ஆதரித்து நிற்கும்.

தேர்தல் அதிகாரிகளின் குழந்தைகளுக்கு வசதிகள் இல்லாத இடங்களுக்கு அவர்களை மாற்றுவது அல்லது அவர்களுடைய உத்யோக உயர்வை நிறுத்தி வைப்பதுபோன்ற முறைகளில் தேர்தல் அதிகாரிகளுக்கு அரசியல் எசமானர்கள் தொல்லை கொடுக்க முடியும் என்றபோதிலும், அவர்களை 'டிஸ்மிஸ்' செய்ய முடியாது.

இந்தச் சிரமங்களைப் பொறுக்க முடியாமல் அரசியல் எசமானர்களின் நியாயமற்ற உத்தரவுகளுக்கு அதிகாரிகள் சிலசமயங்கள் பணிந்துவிட நேரிடும்; இவ்வாறு பணிந்து விடாமல் இருக்கத் துணிவுமிக்க உறுதி வேண்டும்."

(8-ம் பத்தித் தொடர்ச்சி)

கப்படாத வேதங்கள் உண்டா? அவரால் தாக்கப்படாத கடவுள்கள் -- புராணங்கள் -- சாதி, மூட நம்பிக்கைகள் உண்டா? எவ்வளவு பெரிய கருத்துப் புரட்சியை அவர் உருவாக்கிக் காட்டியிருக்கிருர்.

இன்று அதனுடைய முழுப் பயனை நாம் அடையாவிட்டாலும், எதிர்காலம் அடைவது உறுதி அல்லவா?

தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சியினைக் காணுகின்ற பொறுமைக்காரர்கள் -- எரிச்சல்காரர்கள், அவர்களது சூத்திர உணர்வுகளைக் காட்டுகின்றனர்.

இந்த அரசுக்கு -- தந்தை பெரியார் அவர்கள் மொழியிலேயே கூறவேண்டுமானல் -- இந்தப் பகுத்தறிவாளர் அரசுக்குத் துன்பங்கள் ஏற்படும்போதெல்லாம், நாங்கள் அவற்றைத் பொருட்படுத்துவதில்லை; காரணம், 40 ஆண்டுகளாகத் தந்தை பெரியார், இதைவிடத் துணிவுடன் தன்னந்தனியாக எவ்வாறு உழைத்து இந்த நிலையை உருவாக்கியிருக்கிருர் என்பதை உணர்ந்தவர்கள் நாங்கள்; 40 ஆண்டுகளாக அவரே இப்படிப்பட்ட பணிகளைச் செய்திருக்கும் போது, இப்போது நாம் ஏன் பயப்பட வேண்டும் என்ற துணிவினை நாங்கள் வரவழைத்துக் கொள்கிறோம்.

பெரியதோர் ஆலமரமாய் இன்று அவர் காட்சியளிக்கிருர்; எனவே, அதன் கீழே நிற்கும் நாங்கள், எங்களுக்கு ஏற்படும் எதிர்ப்புக்களை எல்லாம் துச்சமெனக் கருதுகிறேம்.

எங்களுக்கு -- எங்கள் ஆட்சிக்கு இன்னலும் இடைஞ்சலும் ஏற்படும்போதெல்லாம் எங்களுக்குக் கிடைக்கும் மாமருந்தாகத் தந்தை பெரியார் விளங்குகிருர்!

பெரியார் அவர்களின் கொள்கை என்கறன்றைக்கும் சாகாதது -- நிலைத்து நிற்பது!

நாட்டில் மனிதனுடைய பகுத்தறிவு எதுவரை வேலை செய்து கொண்டிருக்கின்றதோ அதுவரை பெரியார் அவர்கள் வாழ்வார்கள்!"

அமைச்சர்கள் அன்பில் தர்மலிங்கம், க. இராசாராம், நாடாளுமன்ற உறுப்பினர் மா. முத்துசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். ஆறுமுகம், கந்தப்பன், கீ. வீரமணி நஞ்சையா ஆகியோரும் பேசினர்.

தந்தை பெரியார் அவர்கள் பாராட்டுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினர்.

ஆவலைத் தூண்டிடும் அளவற்ற பரிசுகள் உங்களுக்காகவே!

மொத்தப் பரிசுத் தொகை:

ரூ. 20,00,000*

மொத்தப் பரிசுகள் 5331

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

ஒரு சீட்டின் விலை ஒரு ரூபாய் தான்.



குலுக்கல் நாள்:
30-11-1971

முதல் சிறப்புப் பரிசு
ரூ. 2,50,000
(பொதுவாக எல்லா வரிசைகளுக்கும்)

வழக்கமான பரிசுகள் (ஒவ்வொரு வரிசைக்கும்)
ஒரு இரண்டாவது பரிசு ரூ. 1,00,000

5 மூன்ருவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 10 ஆயிரம்	ரூ. 50,000
10 நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 ஆயிரம்	ரூ. 50,000
50 ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. ஆயிரம்	ரூ. 50,000
1000 ஆருவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. நூறு	ரூ. 1,00,000
	ரூ. 3,50,000

இதுவரை தமிழ்நாடு பரிசுச் சீட்டால் உருவாகியுள்ள லட்சாதிபதிகள்: 258
வெளியீடு: இயக்குநர், செய்தி, விளம்பரத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9
எல்லா விவரங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு, சென்னை-2
*5 வரிசைகள் வெளியீட்டுக்குரியது.



மக்கள் இதய சிம்மாசனத்தில் நீங்கா இடம் பெற்ற தந்தை பெரியார்

வெள்ளிச் சிம்மாசனத்தில் அமர்ந்து காட்சியளித்தார்

கலைஞரையும் அமர்த்திக் கண்டு மகிழ்ந்த கண்கொள்ளாக் காட்சி

சேலம், நவ. 5—

சேலம் பொதுமக்கள் சார்பில் தந்தை பெரியார் அவர்களுக்கு வெள்ளிச் சிம்மாசனத்தை--முதலமைச்சர் கலைஞர் அவர்கள் -- இலட்சக்கணக்கான மக்களின் ஆரவாரத்திற்கிடையே அளித்தார்.

அந்த அரியாசனத்தில் தந்தை பெரியார் அவர்களைக் கலைஞர் அமரச் செய்து பொன்னுடை அணிவித்தார்.

அதில் அமர்ந்த சில நிமிடத்தில் தந்தை பெரியார் அவர்கள், கலைஞரை அழைத்து அதே சிம்மாசனத்தில் அமருமாறு கேட்டுக்கொண்டார்.

கலைஞர் அவர்கள் -- பெரியாரின் கட்டளையை ஏற்று -- அதில் அமர்ந்த இந்தக் காட்சி இலட்சக்கணக்கில் கூடியிருந்த மக்களின் உள்ளத்தை உருக்குவதாக இருந்தது.

மறக்க இயலாதது

வெள்ளிச் சிம்மாசனத்தை வழங்கி டாக்டர் கலைஞர் பேசியதாவது:—

"பெரியார் அவர்களுக்கு வெள்ளிச் சிம்மாசனம் வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். பெரியாரை வெள்ளிச் சிம்மாசனத்தில் அமரச் செய்தபோது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது; ஆனல், பெரியார் அந்த வெள்ளிச் சிம்மாசனத்திலிருந்து எழுந்து என்னை அதில் அமரச் சொன்னபோது எனக்கு நடுக்கம் ஏற்பட்டது; கண்களில் நீர் தளும்பியது; இந்த நிகழ்ச்சியை என் வாழ்நாளில் என்றென்றும் மறக்கமாட்டேன்.

சுதந்தரத்தின் சின்னம்

பெரியாரின் சேவைக்காக அவருக்கு இங்கே வெள்ளிச் சிம்மாசனம் வழங்கப்பட்டது. பெரியார் அந்தச் சிம்மாசனத்தில் அதிக நேரம் உட்காராமல் தன்னுடைய பழைய இடத்திற்கே எழுந்து சென்றுவிட்டார்; இதிலிருந்து, 'பெரியார் எதற்கும் கட்டுப்பட்டுக்கிடக்கும் அடிமையல்லாதவர்' என்பது தெரிகிறது; 'அவர் எப்போதும் சுதந்தரமானவர்' என்பதை எடுத்துக் காட்டுகிருர்.

மக்களின் இதயத்தில் நீங்கா இடம்பெற்றவர்

தமிழ்நாட்டு மக்களின் இதய சிம்மாசனத்தில் பெரியார் நீங்காத இடம் பெற்றிருக்கிருர்.

பெரியாருக்கு இந்தச் சிம்மாசனம் பெரிய பரிசாக இருக்காது; எந்தப் பரிசு அளித்தாலும், அந்தப் பரிசுகளால் அவர் திருப்தியடையமாட்டார்.

பெரியாரின் கொள்கைகளை நாம் எந்த அளவுக்குக் கடைபிடித்து வருகிறேமோ அந்த அளவுக்கு அவர் உற்சாகமடைவார்; அவருடைய இலட்சியங்களை எந்த அளவுக்குக் கடைபிடிக்கிறேம் என்பதைப் பொறுத்துத்தான் அவருடைய வாழ்நாள் நீடிப்பு இருக்கிறது என்று கூறினல், அது மிகையாகாது.

பிரச்சாரத்தின் மூலம் புரட்சியை உண்டாக்கியவர்

சமுதாயச் சீர்திருத்தத்தைப் பெரியார் தைரியமாக எடுத்துக் கூறி வருகிருர்--சமுதாயத்தில பெரிய புரட்சியை ஏற்படுத்திவருகிருர்.

சமுதாயக் கொள்கைகளைச் சொல்லி எதிர் நீச்சல் அடித்தவர்

சமுதாயத்தைப் பார்த்து அரசியல் விமர்சனம் செய்யும்போது அவர்கள பொறுத்துக் கொள்வார்கள்; 'பொருளாதார மாற்றம் தேவை' என்று கூறும்போது அதனை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்; ஆனல், 'சமுதாயம் மாறவேண்டும்' என்னும் போதுதான் அவர்களால் அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை; எதிர்ப்புக் காட்டுபவர்கள் எரிச்சல் கொள்ளுவார்கள்.

ஏமாற்றித் திரிபவர்களும்--ஏமாற்றப்படுபவர்களும் ஆகிய இரு சாராருமே சங்கடப்படுவார்கள்.

அரசியல்வாதி -- மக்களின் கையைத் தொட்டுப் பேசுகிருன்; பொருளாதாரவாதி -- மனிதனின் வயிற்றைத் தொட்டுப் பேசுகிருன்! பகுத்தறிவுவாதி -- மனிதனின் மூளையைத் தொட்டுப் பேசுகிருன்; அதனுல்தான் பலர் ஆத்திர உணர்ச்சிக்கு ஆளாகிருர்கள்.

கடந்த 40 ஆண்டுக் காலத்தில் பெரியார் அவர்களால் விமர்சிக்

(4-ம் பத்தி பார்க்க)

இனி ஏமாறப் போவதில்லை

வங்க தேசப் பிரச்சினை தீரும்வரை படை வாபஸ் கிடையாது

நிக்சனிடம் இந்திரா திட்டவட்ட அறிவிப்பு

வாஷிங்டன், நவ. 6—

"எல்லையிலிருந்து முதலில் பாகிஸ்தான் இராணுவம் திரும்பப் பெறப்படும் வரையிலும் -- வங்க தேசப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்படும் வரையிலும் இந்தியப் படைகளை எல்லையிலிருந்து திரும்பப்பெறும் பிரச்னையே கிடையாது"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, நேற்று குடியரசுத் தலைவர் நிக்சனுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

தலைமையமைச்சர் இந்திரா நேற்று இரண்டாவது தடவையாகவும் நிக்சனை சந்தித்துப் பேசினார்.

"வங்க தேசப் பிரச்சினையில் இரு நாடுகளுக்கும் இருந்துவரும் கருத்துவேற்றுமை சிறிதளவும் குறையவில்லை என்பதே இரண்டாவது பேச்சுவார்த்தைக்குக் காரணமாகும்" என்று நோக்கர்கள் கருதுகின்றனர்.

இந்தியா முதலில் படைகளைத் திரும்பப் பெற வேண்டும்-என்று அமெரிக்கா கூறியதாகத் தெரிய வருகிறது.

நிலைமை சீர்படும் வரையில் இந்தியா தனது படைகளைத் திரும்பப் பெருது--என்பதை உறுதியாகத் தெரிவித்த இந்திராகாந்தி 'ஏற்கனவே இரண்டு தடவை பாகிஸ்தான் போர் தொடுத்தபோதும், ஒரு தடவை செஞ்சீனு போர் தொடுத்தபோதும் ஏற்பட்ட அனுபவம் மேலும் அப்படி ஏமாருமலிருக்க வேண்டுமென்ற படிப்பினையை எங்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது' என்றும் குறிப்பாகத் தெரிவித்தார்.

எல்லைப் பகுதியில் ஐ.நா. பார்வையாளர்களை நிறுத்த வேண்டும் -- என்ற யோசனையை அவர் நிராகரித்துக் கூறியதாவது:—

"இந்தியா ஒரு சனநாயக நாடு; யாரும் எங்கு வேண்டுமானுலும்--எப்போது வேண்டுமானுலும் செல்லலாம்; எனவே, பிரச்சினை அதுவல்ல; கிழக்கு வங்கத்தில் அமைதியை ஏற்படுத்துவது என்பதே பிரச்சினையாகும்.

"நாங்கள் ஒரு சனநாயக நாடாக இருந்துவருவதனுல் தந்துகொண்டிருக்கும் விலையே அகதிகள் பிரச்சினையாகும்.

"இராணுவப் படைகளின் பிரச்சினையைப் பெரிதுபடுத்துவது உலகின் கவனத்தைத் திருப்புவதற்கேயாகும்.

"வங்க தேசப் பிரச்சினை ஒரு அனைத்துலகப் பிரச்சினையல்ல; அது இந்தியா -- பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான ஒரு பிரச்சினையுமல்ல; பாகிஸ்தானுக்கும் -- அதனுல் அடக்கியாளப்படும் ஒரு பகுதி மக்களுக்கும் இடையிலான பிரச்சினையே அது; அம்மக்களால் பெருவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சியின் தலைவர் முஜிபுர் ரகிமானுடன் -- அவர் உயிருடனிருந்தால் -- பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டிய பிரச்சினையே ஆகும் அது."

கடமையை எண்ணிக் கவலையுறுகிறேன்

நிக்சன் முன்னிலையில் நிலைமை விளக்கம்

வாஷிங்டன், நவ. 6

"வங்காள தேசப் பிரச்சினைக்கு அமைதியாகவும்-துரிதமாகவும் தீர்வு காணப்படாவிடில் அது எங்கு கொண்டுபோய் விடும் என்பதை எவராலும் சொல்ல இயலாது.

"என்னுடைய நாட்டைப் பாதுகாப்பதில் எனக்குள்ள பொறுப்பையோ அல்லது கடமையையோ நான் தட்டிக் கழித்து விட முடியாது"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, அமெரிக்க அதிபர் நிக்சன் அளித்த விருந்தில் பேசுகையில் தெளிவுற விளக்கிச் சுட்டிக்காட்டினர்.

மனித குலத்தை உய்விக்க மார்க்கம் காண்போம்!

"உலகில் இந்தியப் பகுதியிலுள்ள நிலவரத்தை அமெரிக்கா ஆழமாகப் புரிந்து கொள்ளுமென்று நம்புகிறேன்; சோர்விலிருந்தும் மனித குலத்தைக் காப்பாற்றும் வகையில் விவேகமான தூண்டுதலை நாடி இங்கு வந்திருக்கிறேன்.

"நமது நட்புறவில் எந்நாளும் ஒளி பரவட்டுமென்ற குடியரசுத் தலைவரின் விருப்பத்தை நானும் உளமார -- முழு அளவுக்குப் பகிர்ந்துகொள்கிறேன். இத்தனை ஆண்டுகளாக நம் மக்களும்--நம் அரசுகளும் போற்றிவந்த இலட்சியங்களுக்காகப் பாடுபடுவோமாக!

"தங்கள் அழைப்புக்காக நன்றி; ஆனுல், இந்தியா தவித்துக் கொண்டிருக்கும்போது வெளியே வர இயலவில்லை; இயற்கையால் நேர்ந்த பஞ்சம்-- வெள்ளம் -- புயல் ஆகியவை போதாதென்று மனிதனுல் உண்டாக்கப்பட்ட அளவிட முடியாத துக்கம் வேறு!

"எங்கள் நாட்டில் அகதி முகாம்களில் நிரம்பியுள்ள அகதிகளின் வேதனை தோய்ந்த [illegible]ங்கள் என் கண் முன்னே [illegible] கோரச் சம்பவங்களின் [illegible]வாகக் கிழக்கு வங்காளத்திலிருந்து வலுக்கட்டாயமாக இலட்சக்கணக்கில் வெளியேறி வந்துள்ளனர்.

"மனித குலத்தைத் துயரத்தினின்றும் காக்கும் ஏதோ ஒரு விவேகமான தூண்டுதல் மற்றிச் சரித்திரம் நமக்கு எடுத்துரைத்துள்ளது.

"நமது பேச்சுவார்த்தைகள், இரு நாடுகளுக்கிடையிலும் நட்டையும் -- உணர்வையும் பலப்படுத்துமென்பதில் எனக்குச் சந்தேகமில்லை; ஆசியாவிலும் -- உலகிலும் சமாதானத்துக்காக நாம் பாடுபடுகையில நமது வழியை அது தெளிவாகக் காட்டும்.

"இலட்சியங்களின் பிணைப்பு நம் வசமுள்ளது; எனவே, நம்மிடையில், நலன்களைக் குறித்துத் தகராறு இல்லை. உங்கள் நட்பில் எங்கள் மக்களுக்கு மதிப்பு அதிகம்; அமெரிக்க மக்களின் கண்டுபிடிப்பு வேட்கையை எங்கள் மக்கள் பெரிதும் பாராட்டுகிறுர்கள்; உங்களுக்கும் குளிர்ந்த உள்ளம் படைத்த அமெரிக்க மக்களுக்கும் இந்திய மக்களின் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

யாகியா கானின் தூதுவராக பூட்டோ

ஆயுதங்கள் வாங்க சீன பயணமாம்

புதுடில்லி, நவ. 6—

எப்போதுமே இந்தியா விரோத மனப்போக்கைக் கொண்ட பூட்டோ, பாகிஸ்தானின் உயர் மட்டத் தூதுக் குழு ஒன்றுக்குத் தலைமைதாங்கி திடீரென சீனுவுக்குச் சென்றிருக்கிறுர்.

யாகியா கானின் தனிப் பிரதிநிதியாகப் பூட்டோ சீனு சென்றிருப்பதாகப் பாகிஸ்தான் வானெலி அறிவிக்கிறது.

அமெரிக்காவில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி இன்று கடைசிக் கட்டப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும்போது பூட்டோ சீனு சென்றிருப்பதை, நோக்கர்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுகின்றனர்.

துணைக் கண்டத்தில் போர் ஏற்பட்டால், சீனு வாய் மூடிக் கொண்டு இருக்காது என்பதை சம்பந்தப்பட்டவர்களுக்கு உணர்த்தவே பூட்டோவின் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

சீனுவுக்குச் செல்வதற்குமுன், அரபு நாடுகளின் ஆதரவைப் பெறும் நோக்குடன் அவர் கெய்ரோவுக்கும் சென்றிருந்தார்.

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்
அருகிலுள்ள மருத்துவ நிலையத்தில் ஆய்வுரை பெறுக
வெளியீடு: நலவழி—குடும்ப நலத் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-6.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

7--11--71

திண்டுக்கல்

எம். ஜி. ஆர். மன்றப் புதிய கட்டடத் திறப்பு விழா; மாலை 7-மணிக்கு நாயக்கர் புதுத் தெருவில்; தலைவர்: பி. ஆண்டிவேல்சாமி; கொடியேற்றுபவர்: டாக்டர் து. இராமலிங்கம்; கட்டடத் திறப்பாளர்: ஓ. என். சிவஞானம்; அண்ணு படத் திறப்பாளர்: மொன். சீனிவாசன்; கலைஞர் படத் திறப்பாளர்: டாக்டர் ஆர். முனியப்பன்; எம். ஜி. ஆர். படத் திறப்பாளர்: க. வே. வி. இராசன்; பேசுவோர்: கே. நாகராசன் எம்.எல்.ஏ., பி. முத்துசாமி எம்.எல்.ஏ., எஸ். வரதராசன் எம்.சி., என். கோவிந்தராசு எம்.சி., என். முத்து, பெ. சுருப்பையா, இரா. சுப்பராயலு, கு. நாராயணசாமி.

வில்லிவாக்கம்

முத்தமிழ் மன்றச் சார்பில் பேரறிஞர் அண்ணு பிறந்த நாள் விழா; மாலை 6 30 மணிக்கு தாமோதரப்பெருமாள் கோயில் மண்டபம் எதிரில்; தலைவர்: தாழை இரா. வில்லாளன்; பேசுவோர்: செ. கந்தப்பன் எம்.எல்.ஏ., தி. சு. இலட்சுமணன் எம்.பி., மா. வெ. நாராயணசாமி எம்.எல்.ஏ., டி. எம். பார்த்தசாரதி, ஆ. பலராமன், மு. சு. மணி, மற்றும் பலர்.

சென்னை 34-ல் உள்ள இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை ஆணையாளர் முன்பாக

மனு எண்: 332/1971

நிர்வாக அதிகாரி,
ஸ்ரீ பரசுநாதசுவாமி ஆலயம்,
முழையூர்,
கும்பகோணம் வட்டம்,
தஞ்சை மாவட்டம். —மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் முழையூர் கிராமம் ஸ்ரீ பரசுநாதசுவாமி கோயில் விஷயமாக:—

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் முழையூர் கிராமம் ஸ்ரீ பரசுநாதசுவாமி கோயிலுக்குச் சொந்தமாகத் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் முழையூர் கிராமத்தில், மேற்படி ஆலயத்தில் முன்புறம் உள்ள சாவே எண் 116-ல, 1 முதல் 3 முடிய உள்ள புஞ்சை நிலத்தில் உள்ள 18 இலுப்பை மரங்கள் -- ஒவ்வொன்றின் விலை ரூ. 100 என ஏலத் தொடக்க விலையாகக் கொண்டு -- மேற்படி மரங்களைப் பொது ஏலத்தில் விற்பனை செய்ய அனுமதி வேண்டி 1959-ம் வருடத்தய இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம (தமிழ் நாடு சட்டம் 22/1959) 34-வது பிரிவின்கீழ் செய்துகொண்ட மனு:—

நோட்டீஸ் மனு எண் 332/71 டி. 1

நாள் 11—10—71

1. மேற்படி மனு குறித்து, சென்னை-34, நுங்கம்பாக்கம்நெடுஞ்சாலையிலுள்ள தமது அலுவலகத்தில் இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித்துறை ஆணையாளர் அவர்களால் 10—12—71 அன்று பிற்பகல் 2-மணியளவில் விசாரணை நடத்தப்படும்.

2. மேற்படி மனு குறித்துக் கருத்துரைகளோ மறுப்புரைகளோ எவையேனும் இருப்பின், அவற்றினை எழுத்து மூலமாக 8—12—71 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ இவ்வலுவலகத்திற்கு வந்து சேருமபடி அனுப்பிவைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின அவற்றை நேரிலும் விசாரணையின்போதும தெரிவித்துக்கொள்ளலாம்.

கோ. நந்தகோபால்
ஆணையாளருக்காக

தியாகிகளை 'அனுதை' ஆக்கியவரின் கூற்று!

நிலைமையை விளக்கி முதல்வர் கலைஞர் மறுப்பு

சென்னை, நவ. 6-

தியாகிகளுக்கு உதவிப் பணம் கொடுப்பது பற்றிய அரசாங்க உத்தரவில், 'அனுதை' என்ற வார்த்தை நீக்கப்பட்டது தொடர்பாக முன்னுள் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள், ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார்; அதற்குப் பதிலளிக்கும் வகையில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டார்; அதில் கூறப்பட்டிருப்பதாவது:—

"சுதந்தரப் போராட்ட தியாகிகளுக்கு உதவிப் பணம் கொடுப்பதில், 'அனுதைத் தியாகிகள்' என்று தமிழ்நாடு அரசாங்க உத்தரவில் குறிப்பிட்டிருப்பதில், 'அனுதை' என்ற வார்த்தையை நீக்கிவிடும்படி வேண்டிக்கொண்டு-- தியாகிகள் கமிட்டித் தலைவர் சோமயாசுலு, டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி, பெருமாள், இராதாகிருஷ்ணன் ஆகியோர் என்னிடம் மனு கொடுத்தார்கள்; அதன்பேரில், அரசாங்க உத்தரவில் இருந்த 'அனுதை' என்ற வார்த்தையை நீக்கும்படி உத்தரவிட்டேன்.

ஆனுல், பழைய 1966-ம் ஆண்டு அரசாங்க உத்தரவில், 'அனுதை' என்ற வார்த்தையே கிடையாது -- என்று முன்னுள் முதலமைச்சர் பக்தவத்சலம் ஓர் அறிக்கையில் கூறியிருக்கிறுர்.

1966-ம் ஆண்டு வெளியிட்ட அந்த அரசாங்க உத்தரவு எண் 2064-ல், 'அனுதை' என்றவார்த்தைக்கு விளக்கம் தந்திருக்கிறுர்கள்; உத்தரவின் விதிகளிலும், 'அனுதை' என்ற வார்த்தை இருக்கிறது.

ஆனுல், சில பத்திரிகைகளில், 'அனுதை' என்ற வார்த்தையை முன்னுள் முதலமைச்சர் நீக்கிவிட்டு, அதற்குப் பதில், 'தகுதியான தியாகிகள்' என்ற வார்த்தையை அவரே சேர்த்திருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன.

அந்த 'அனுதை' என்ற வார்த்தையை உத்தரவிலிருந்து நீக்கியிருந்தபோதிலும், அதன் அர்த்தம், அந்த உத்தரவின் 4-வது பிரிவில் -- 2 வது உட்பிரிவில் இன்னமும் இருக்கத்தான் செய்கிறது.

எப்படியென்ருல், 'சொந்தக்காரர்களிடமிருந்து கிடைக்கும் உதவியையும் சேர்த்து அவர் மாத வருமானம் ரூ. 100-க்கு மேல் போனுல்' என்ற வாக்கியம் முந்திய உத்தரவில் இருக்கிறது.

ஆகவே, அந்த வாக்கியத்தை மாற்றி, தகுதியான தியாகி என்பதற்கு, 'அவர் வருமானம் மாதம் ரூ. 100-க்குள் குறைவாக இருந்தால்' என்ற வாக்கியத்தை மட்டும் பதிலுக்குச் சேர்க்கும்படி உத்தரவிட்டிருக்கிறேன்."

ஆயத்தமாகிறது....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு -- அவசரத் தேவைக்காக ஊர்க் காவல் படையினரை ஈடுபடுத்துவது--போலீசுப் படையினரை எச்சரிக்கை நிலையில் வைத்திருப்பது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

பெரியாருக்குக் குளித்தலை ஊராட்சி ஒன்றிய வரவேற்பு

குளித்தலை ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் 7—11—71 காலை 11-மணிக்கு தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (34, [illegible] தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.